**இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# மாதிரி வினாத்தாள் மற்றும் விடைகள்

## (304) கூட்டு நிறுவன மற்றும் தனிநபர் வரியியல் (CPT)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

## 304 நிறுவன மற்றும் தனியாள் வரியியல் (CPT)

## மாதிரி வினாக்கள் (2022/23 ம் மதிப்பீடு ஆண்டிற்குரியது)

### வினா இல.01

வரையறுத்த ரோஸ் நிறுவனமானது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட நுகர்வோர் பொருட்களை உள்ளூர் சந்தையில் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.

பின்வரும் தகவல்கள் வரையறுத்த ரோஸ் நிறுவனத்தின் 31மார்ச்-2023. இல் முடிவுற்ற ஆண்டு நிதிக்கூற்றிலிருந்து பெறப்பட்டவையாகும்:

1. 31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அனைத்து செலவுகளையும் செலுத்தி மற்றும் வருமானங்களை வரவு வைத்ததன் பின்னரான வரிக்கு முந்திய தேறிய இலாபமானது ரூ.35,750,000 நிறுவனத்தின் மொத்த வருவாயானது ரூ.550,820,000.

2. ஏனைய வருமானங்களின் வகைப்படுத்தல் பின்வருமாறு.

| வருமானம் | தொகை (ரூ) | பற்றுச்சீட்டு திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| பங்கு இலாபம் | 600,000 | 15/02/2023 | PQ LC- நடப்பு ஆண்டின் வணிக இலாபம் |
| பங்கு இலாபம் | 850,000 | 15/06/2022 | AB PLC- பெறப்பட்ட பங்கு இலாபம் |
| வட்டி | 1000,000 | 30/08/2022 | ABC வங்கி |
| வட்டி | 475,000 (நிகர) | 15/02/2023 | PQR வங்கி |
| லொறிகளை அகற்றியதன் மூலமான இலாபம் | 7,100,000 | 12/09/2022 | |

3. நிர்வாகச்செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:
    - ஆண்டிற்கான பெருமானத்தேய்வு ரூ.8,150,000.
    - உற்பத்தித்திறனை மேம்படுத்தும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ரூ. 300,000 ஆனது வருடத்தில் செலவிடப்பட்டது.
    - வெளிநாட்டு பயணச்செலவானது ரூ.1,500,000. இதில் ரூ. 650,000 ஆனது நிறுவன இயக்குனரின் குடும்பச்சுற்றுலா செலவிற்காக செலுத்தப்பட்டது. மிகுதியானது பொறியியலாளர் ஒருவர் பயிற்சியில் பங்கெடுக்க மேற்கொள்ளப்பட்டது.

4. 31 மார்ச் 2023 இன் படி பணிக்கொடை ஒதுக்கீடு கணக்கு வருமாறு.

| | ரூ. |
|---|---|
| 01.04.2022 இல் மீதி | 6,500,000 |
| வருடத்திற்கான ஏற்பாடு (நிர்வாகச் செலவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது) | 4,750,000 |
| ஆண்டில் செலுத்தப்பட்டது | (5,950,000) |
| 31.03.2023 இல் மீதி | 5,300,000 |

5. விநியோகச் செலவுகள் உள்ளடக்கியவை வருமாறு:
   - வாடிக்கையாளர்களின் களியாட்டச் செலவு, ரூ.698,000.
   - இலத்திரனியல் பெயர்பலகைக்கான செலவு ரூ.1,500,000.
   - நிறுவனமானது ரூ 3,400,000 பெறுமதியான மருத்துவ உபகரணங்களை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு நன்கொடையாக வழங்கியது.
   - ரூ500,000 ஆனது அறவிட முடியா கடனாக பதிவழிக்கப்பட்டது.

6. அறவிட முடியா கடன் ஒதுக்கீடு கணக்கு வருமாறு.

| | ரூ. |
|---|---|
| 01.04.2022 இல் மீதி | 2,500,000 |
| வருடத்திற்கான ஏற்பாடு (விநியோகச் செலவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது) | 1,750,000 |
| 31.03.2023 இல் மீதி | 4,250,000 |

7. ஆதனம்,பொறி உபகரண தகவல்கள் வருமாறு

| | நிலம் | கட்டிடங்கள் | வாகனங்கள் | அலுவலக உபகரணங்கள் | தளபாடங்கள் | கணினி | மென்பொருள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம்** | | | | | | | | |
| 01.04.2022 இல் மீதி | 250,000,000 | 150,000,000 | 45,000,000 | 10,500,000 | 4,500,000 | 8,900,000 | - | 468,900,000 |
| சேர்ப்புக்கள் | | 75,000,000 | | | | 1,250,000 | 7,500,000 | 83,750,000 |
| அகற்றல் | | | (12,000,000) | | | | | (12,000,000) |
| **31.03.2023** இல் மீதி | **250,000,000** | **225,000,000** | **33,000,000** | **10,500,000** | **4,500,000** | **10,150,000** | **7,500,000** | **540,650,000** |
| **பெறுமான தேய்வு** | | | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01.04.2022 இல் மீதி | | 78,000,000 | 32,000,000 | 6,500,000 | 1,750,000 | 6,700,000 | | 124,950,000 |
| வருடாந்த கட்டணம் | | 2,760,000 | 3,000,000 | 1,050,000 | 450,000 | 890,000 | | 8,150,000 |
| அகற்றல் | | | (11,100,000) | | | | | (11,100,000) |
| **31.03.2023 இல் மீதி** | | **80,760,000** | **23,900,000** | **7,550,000** | **2,200,000** | **7,590,000** | | **122,000,000** |
| **கொண்டுசெல் பெறுமதி** | **250,000,000** | **144,240,000** | **9,100,000** | **2,950,000** | **2,300,000** | **2,560,000** | **7,500,000** | **418,650,000** |

- 2021/2022 இல் நிர்வாக இயக்குனரின் பாவனைக்காக ஒரு கார் கொள்வனவு செய்யப்பட்டது, இதன் பெறுமதி ரூ. 12,000,000/-
- 2020/21 வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 03 லொறிகள் ரூ. 8,000,000 இற்கு விற்பனை செய்யப்பட்டன
- இவ் வருடம் கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருளானது 10 ஆண்டுகளில் ஒப்பந்தத்தின்படி பகிர்ந்தளிப்பு (பெறுமானமிழப்பு) செய்யப்படும்.
- மேற்குறிப்பிட்டவற்றைத்தவிர,, 01-04-2022 இல் உள்ளவாறான ஏனைய சொத்துக்கள் அனைத்தும் 2019/2020 மதிப்பீட்டின் போது கொள்வனவு செய்யப்பட்டவையாகும்

8. மேலதிக தகவல்கள்
   - சுய மதிப்பீட்டு அடிப்படையில் 2022/23 மதிப்பீட்டு ஆண்டிற்கான செலுத்தப்பட்ட வரிகள் ரூ.1,500,000/-
   - வணிகத்தின் அனைத்து ஏனைய செலவினங்களும் வருமான வரி நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

வேண்டப்படுபவை:

2022/23 மதிப்பீட்டு ஆண்டிற்கான வரையறுத்த ரோஸ் நிறுவனத்தின் பின்வருவனவற்றை மதிப்பிடவும்.

(அ) மதிப்பீட்டு வருமானம்.

(ஆ) வரி விதிக்கக்கூடிய வருமானம்.

(இ) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி, மற்றும்,

(ஈ) செலுத்த வேண்டிய அட்டுறு வருமான வரி.

(**குறிப்பு**: எந்தவொரு செலவினத்தையும் அனுமதிக்க அல்லது தவிர்க்க சரியான காரணங்களை தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.)

**வினா இல.02**

திரு.சொய்சா ,வரையறுத்த தனியார் நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக பணியாற்றும் ஒரு தனி நபர் . 2022/2023 வருடாந்த மதிப்பீட்டிக்காக அவரின் வருமானம் தொடர்பான பின்வரும் தகவல்கள் வழக்கப்பட்டுள்ளன (இனி 'ஆண்டு' என்று குறிக்கப்படுகிறது):

1. வேலைவாய்ப்பு மூலமான வருமானம்:

- மொத்த ஊதியம் மாதம் - ரூ.450,000/-.
- ஒரு மாத சம்பளம் ஊக்கத்தொகையாக ஏப்ரல் 2022 இல் வழங்கப்பட்டது.
- ஒரு மோட்டார் காரை (1000 சிசி) ஓட்டுனர் உடன் நிறுவனம் வழங்கியுள்ளது.
- ரூ.50,000/- மாத வாடகையாக செலுத்தி கொழும்பில் ஒரு வாடகை வீட்டில் வசிக்கிறார். அதற்கு நிறுவனம் மாதாந்தம் ரூ.40,000/- வழங்குகிறது.
- டிசம்பர் 2022 இல், ஒரு வெளிநாட்டு மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் பிரான்சிற்கு அனுப்பப்பட்டார். அதற்காக நிறுவனம் ரூ.560,000/- மதிப்புள்ள விமான டிக்கெட் மற்றும் பிற வசதிகளை வழங்கியது.
- நிறுவனத்தின் மருத்துவத் திட்டத்தின் கீழ் மருத்துவக் கட்டணத்தை ரூ.175,000/- வரை மீள்நிரப்ப முடியும். இந்த வசதி நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

  முதல் ஒன்பது மாதங்களுக்கு APITஐ அறவிடுவதற்கு திரு சொய்சா சம்மதம் தெரிவிக்காமையால் APIT ஆனது , ஜனவரி 01, 2023 முதல் அறவிடப்பட்டது. 01.01.2023 முதல் 31.03.2023 வரை அறவிடப்பட்ட வரி ரூ. 341,000 ஆகும்.

2. முதலீட்டு வருமானம்

| மூலம் | தொகை (ரூ) | பெறப்பட்ட திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| பங்கு இலாபம் | 100,000 | 25/08/2022 | பெறப்பட்ட பங்கு இலாபத்தில் விநியோகிக்கப்பட்டது |
| வாடகை | 50,000 மாதாந்தம் | மாதாந்தம் | WHT கழிக்கப்படவில்லை |
| வட்டி | 65,000 (மொத்த) | 30/06/2022 | ABC வங்கி |
| வட்டி | 95,000 (நிகர) | 15/01/2023 | PQ வங்கி – WHT கழிக்கப்பட்டுள்ளது |

3. வணிக வருமானம்

திரு. சொய்சா ஒரு சிறிய அளவிலான கொபி ஷாப் ஒன்றினை நடத்தி வருகிறார், மார்ச் 31, 2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருவாய் அறிக்கை பின்வருமாறு.

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| விற்பனை | 6,950,000 | |
| விற்பனை கிரயம் | (4,100,000) | |
| மொத்த இலாபம் | | 2,850,000 |
| சம்பளம் | 625,000 | |
| கிராம விகாரைக்கான நன்கொடை | 394,000 | (1,019,000) |
| தேறிய இலாபம் | | 1,831,000 |

4. திரு. சொய்சா இந்த வருடத்தில் மேற்கொண்ட கொடுப்பனவுகள் வருமாறு.

- மருத்துவ காப்பீட்டு கட்டணத்தொகை – ரூ.24,000/- மாதாந்தம்
- மகனுக்கான கல்விக்கட்டணம் ரூ.165,000 20-01-2023 அன்று செலுத்தப்பட்டது
- பட்டியலிடப்பட்ட நிறுவனத்தி லிருந்து ரூ.250,000 பெறுமதியான பங்குகளை 07-ஆகஸ்ட் - 2022 அன்று கொள்வனவு செய்தார்.

5. பெப்ரவரி ,2023 இல், மஹரகம அபேக்ஷா மருத்துவமனைக்கு ரூ.100,000/- மதிப்புள்ள சுகாதார உபகரணங்களை அவர் நன்கொடையாக அளித்துள்ளார், மேலும் ஆகஸ்ட், 2022 இல் ஒரு பாடசாலைக்கு ரூ.150,000/- மதிப்பிலான பொருட்களை நன்கொடையளித்தார்

6. திரு. சொய்சா இந்த ஆண்டில் சுயமதிப்பீடு மூலம் செலுத்திய வரித் தொகையானது ரூ.225,000/-.

வேண்டப்படுபவை: திரு சொய்சாவின் 2022/23 மதிப்பீட்டு ஆண்டிற்கான பின்வருவனவற்றை மதிப்பிடவும்.

(அ) வரி விதிக்கக்கூடிய வருமானம்.

(ஆ) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி.

(இ) செலுத்த வேண்டிய அட்டுறு வருமான வரி / (மேலதிகமாக செலுத்தப்பட்டது),

(ஈ) விலக்கப்பட்ட வருமானம், ஏதும் இருப்பின்,

## விடைகள்
## வினா இல.01

**முக்கிய குறிப்பு: வதிவிட நிறுவனங்களுக்காக வருமான வரியில் திருத்தங்கள் 01/அக்டோபர் /2022 முதல் மேற்கொள்ளப்பட்டன. மற்றும் கணிப்பீடு (முதலாவது முறை ) முதல் ஆறு மாதங்கள் மற்றும் கடைசி ஆறு மாதங்கள் என கணக்கிடப்படுகிறது.மாணவர்களின் வசதியை கருத்திற்கொண்டு அணைத்து திருத்தங்களும் 01-04-2022 முதல் நடைமுறைக்கு வரும் என கருதி இரண்டாவது முறையை AAT தேர்வில் கணிப்பிட அனுமதிக்கப்படுகிறது.**

1வது முறை

| | **1வது 6 மாதங்கள்** | **2வது 6 மாதங்கள்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| வணிகம் மூலமான வருமானம் (குறிப்பு 01) | 9,821,500 | 9,821,500 | 19,643,000 |
| முதலீட்டின் மூலமான வருமானம் (குறிப்பு 02) | 1,600,000 | 500,000 | 2,100,000 |
| **கணக்கிடக்கூடிய வருமானம்** | **11,421,500** | **10,321 ,500** | **21,743,000** |
| பல்கலைக்கழகத்திற்கான நன்கொடை (3,400,000) | (1,700,000) | (1,700,000) | (3,400,000) |
| **வரி விதிக்கக்கூடிய வருமானம்** | **9,721,500** | **8,621,500** | **18,343,000** |
| | | | |
| **<u>மொத்த வருமான வரிப் பொறுப்பு</u>** | | | |
| **வரிப் பொறுப்பு** | **1வது 6 மாதங்கள்** | **2வது 6 மாதங்கள்** | **மொத்தம்** |
| 1வது 6 மாதங்கள் | | | |
| பங்கு இலாப வருமானத்தில் (600,000 @ 14% | 84,000 | | 84,000 |
| வட்டியில் @ 24% | 240,000 | | 240,000 |
| வணிக வருமானத்தில் @ 18% (உற்பத்தி) | 1,461,870 | | 1,461,870 |
| | | | |
| **2வது 6 மாதங்கள்** | | | |
| <u>மொத்த</u> வரி விதிக்கக்கூடிய 30% | | 2,586,450 | 2,586,450 |
| | 1,785,870 | 2,586,450 | 4,372,320 |
| வரிச்செலவு | | | |
| வட்டியில் AIT (ரூ.500,000 @ 5%) | | | (25,000) |
| சுயமதிப்பீடு | | | (1,500,000) |
| **செலுத்த வேண்டிய** அட்டுறு **வருமான வரி** | | | **2,847,320** |

02**வது முறை**

**2022/2023 மதிப்பீட்டின் போது செய்யப்பட்ட அனைத்து வருமான த் திருத்தங்களும் 01-04-2022 முதல் நடைமுறைக்கு வரும் எனக் கருதி AAT தேர்வில் இந்த முறைக்கான மதிப்பெண்கள் வழங்கப்படும்.**

| | |
|---|---|
| வணிகம் மூலமான வருமானம் (குறிப்பு 01) | 19,643,000 |
| முதலீட்டின் மூலமான வருமானம் (குறிப்பு 02) | 2,100,000 |
| **கணக்கிடக்கூடிய வருமானம்** | **21,743,000** |
| பல்கலைக்கழகத்திற்கான நன்கொடை (3,400,000) | (3,400,000) |
| **வரி விதிக்கக்கூடிய வருமானம்** | **18,343,000** |
| | |
| வரி வருமானத்தின் வருமான வரிப்பொறுப்பு @ 30% | 5,502,900 |
| வரிச்செலவு | |
| AIT – வட்டியில் (1,500,000 @ 5%) | (75,000) |
| AIT – பங்கு இலாபம் (600,000 @ 15%) | (90,000) |
| சுயமதிப்பீட்டுக்கொடுப்பனவு | (1,500,000) |
| **செலுத்த வேண்டிய அட்டுறு வருமான வரிப் பொறுப்பு** | **3,837,900** |

**குறிப்பு 01 - வணிகம் மூலமான வருமானம்**

| | + | - |
|---|---|---|
| வரிக்கு முந்தைய லாபம் | 35,750,000 | |
| **முதலீட்டின் மூலமான வருமானம்** | | |
| பங்கு இலாபம் மூலமான வருமானம் | | 1,450,000 |
| வட்டியி மூலமான வருமானம் | | 1,475,000 |
| சொத்துக்களை அகற்றல் | | 7,100,000 |
| பெறுமான தேய்வு | 8,150,000 | |
| ஆராய்ச்சி – மேலதிகமாக 100% அனுமதிக்கப்பட்டது | | 300,000 |
| வெளிநாட்டுப் பயணம் (குடும்பச் சுற்றுலா ) | 650,000 | |
| வெளிநாட்டுப் பயணம் - ரூ.850,000 - வரை | | |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 4,750,000 | |

| | | |
|---|---|---|
| பணிக்கொடை செலுத்தப்பட்டது | | 5,950,000 |
| வாடிக்கையாளர்களின் களியாட்டச் செலவு | 698,000 | |
| இலத்திரனியல் பெயர்பலகை- மூலதனம் | 1,500,000 | |
| நன்கொடை | 3,400,000 | |
| அறவிட முடியா கடன் - அனுமதிக்கப்பட்டது | | |
| அறவிட முடியா கடன் பொது ஒதுக்கீடு | 1,750,000 | |
| நிலம் - மூலதனக் கொடுப்பனவு அற்றது (CA) | | |
| கட்டிடம் (225,000,000/20) | | 11,250,000 |
| நிர்வாக இயக்குனர் பயன்படுத்திய கார் - C/A அற்றது | | |
| இருப்பு -மோட்டார் வாகனங்கள் (21,000,000/5) | | 4,200,000 |
| அலுவலக உபகரணங்கள் (10,500,000/5) | | 2,100,000 |
| தளபாடங்கள் (4,500,000/5) | | 900,000 |
| பெயர்பலகை (1500000/5) | | 300,000 |
| கணினி (10,150,000/5) | | 2,030,000 |
| மென்பொருள் (7,500,000/10) | | 750,000 |
| மதிப்பீட்டுக் கட்டணம் | | |
| விற்பனையை தொடர 8,000,000 | | |
| கிரயம் 12,000 | | |
| CA (4800) 7,200,000 | | |
| வரி விதிக்கக்கூடிய லாபம் 800,000 | 800,000 | |
| | 57,448,000 | 37,805,000 |
| **வணிகம் மூலமான வருமானம்** | **19,643,000** | |

**குறிப்பு 02 - முதலீட்டின் மூலமான வருமானம்**

| | **1வது 6 மாதங்கள்** | **2வது 6 மாதங்கள்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| இலாபத்தில் பங்கு இலாபம் | 600,000 | | 600,000 |
| பெறப்பட்ட பங்கு இலாபம் மூலமான பங்கு இலாபம் | | விலக்கப்பட்டது | விலக்கப்பட்டது |
| வட்டி வருமானம் - ABC வங்கி | 1,000,000 | | 1,000,000 |
| வட்டி வருமானம் -, PQR (475,000/95*100) | | 500,000 | 500,000 |
| | **1,600,000** | **500,000** | **2,100,000** |

## வினா இல.02

**முக்கிய குறிப்பு: வதிவிட நிறுவனங்களுக்காக வருமான வரியில் திருத்தங்கள் 01/ஜனவரி /2023 முதல் மேற்கொள்ளப்பட்டன. மற்றும் கணிப்பீடு (முதலாவது முறை ) முதல் ஆறு மாதங்கள் மற்றும் கடைசி ஆறு மாதங்கள் என கணக்கிடப்படுகிறது.மாணவர்களின் வசதியை கருத்திற்கொண்டு அனைத்து திருத்தங்களும் 01-04-2022 முதல் நடைமுறைக்கு வரும் என கருதி இரண்டாவது முறையை AAT தேர்வில் கணிப்பிட அனுமதிக்கப்படுகிறது.**

**1 வது முறை**

**திரு சொய்சாவின் வரிக் கணக்கீடு**

**2022/23 ஆண்டிற்கான மதிப்பீட்டு**

| <u>**தொழில் வருமானம்**</u> | <u>**முதல் 9 மாதங்கள்**</u> | <u>**இறுதி 3 மாதங்கள்**</u> | <u>**மொத்தம்**</u> |
|---|---|---|---|
| சம்பளம் 450,000 *12 | 4,050,000 | 1,350,000 | 5,400,000 |
| ஊக்கத்தொகை | 450,000 | | 450,000 |
| வாகன வசதி (30,000 மாதாந்தம்) | 270,000 | 90,000 | 360,000 |
| வீட்டு வசதி (40,000 மாதாந்தம்) | 360,000 | 120,000 | 480,000 |
| வெளிநாட்டு மாநாடு -வரிக்குரிய வருமானமில்லை | - | - | - |
| மருத்துவ வசதி - (அனைத்து ஊழியர்களுக்கும்) | - | - | - |
| | **5,130,000** | **1,560,000** | **6,690,000** |
| <u>**முதலீட்டு வருமானம்**</u> | | | |
| பங்கு இலாபம் | விலக்கப்பட்ட வருமானம் | | விலக்கப்பட்ட வருமானம் |
| வாடகை வருமானம் | 450,000 | 150,000 | 600,000 |
| வட்டி வருமானம் | 65,000 | | 65,000 |
| வட்டி வருமானம் (WHT கழிக்கப்பட்டது) | | 100,000 | 100,000 |
| | **515,000** | **250,000** | **765,000** |
| **வணிக வருமானம்** | | | |
| தேறிய இலாபம் | 1,373,250 | 457,750 | 1,831,000 |
| நன்கொடை - அனுமதியில்லை | 295,500 | 98,500 | 394,000 |
| | **1,668,750** | **556,250** | **2,225,000** |
| **மொத்த மதிப்பிடத்தக்க வருமானம்** | **7,313,750** | **2,366,250** | **9,680,000** |
| தனிப்பட்ட கொடுப்பனவு | (2,250,000) | (300,000) | (2,550,000) |
| வாடகைக்கான நிவாரணம் | (112,500) | (37,500) | (150,000) |
| <u>**தகைமைக் கொடுப்பனவு**</u> | | | |
| மருத்துவக் காப்பீடு (31.12.2022 வரை அனுமதி) | (216,000) | | (216,000) |
| கல்விச் செலவு (31.12.2022 வரை அனுமதி) | | அனுமதியில்லை | - |
| பங்கு கொள்வனவு (31.12.2022 வரை அனுமதி) | (250,000) | | (250,000) |
| நன்கொடை - அரசாங்கத்துக்கு | | (100,000) | (100,000) |

| | | | |
|---|---|---|---|
| நன்கொடை - பொருள் (அனுமதியில்லை) | - | | |
| **வரி விதிக்கக்கூடிய லாபம்** | **4,485,250** | **1,928,750** | **6,414,000** |
| | | | |
| **<u>மொத்த வருமான வரிப் பொறுப்பு</u>** | | | |
| **முதல் 9 மாதங்கள்** | | | |
| முதல் 2,250,000 @ 6% | 135,000 | | 135,000 |
| மீதி @ 12% | 268,230 | | 268,230 |
| | | | |
| <u>இறுதி 3 மாதங்கள்</u> | | | |
| முதல் 125,000 @6% | | 7,500 | 7,500 |
| அடுத்த 125,000 @ 12% | | 15,000 | 15,000 |
| அடுத்த 125000 @ 18% | | 22,500 | 22,500 |
| அடுத்த 125,000@ 24% | | 30,000 | 30,000 |
| அடுத்த 125,000 @30% | | 37,500 | 37,500 |
| மீதி (1928750-625000) @ 36% | | 469,350 | 469,350 |
| **மொத்த வருமான வரிப் பொறுப்பு** | **403,230** | **581,850** | **985,080** |

| | |
|---|---|
| மொத்த வருமான வரிப் பொறுப்பு | 985,080 |
| APIT | (341,000) |
| வட்டி - AIT | (5,000) |
| சுயமதிப்பீடு | (225,000) |
| **அட்டுறு வருமான வரி** | **414,980** |

*ஒரு வருடத்திற்கு 3,000,000 எனவே 9 மாதங்கள் 2,250,000

**ஒரு வருடத்திற்கு 500,000 எனவே 3 மாதங்கள் 125,000

**2வது முறை**

**2022/2023 மதிப்பீட்டின் போது செய்யப்பட்ட அனைத்து வருமான த் திருத்தங்களும் 01-04-2022 முதல் நடைமுறைக்கு வரும் எனக் கருதி AAT தேர்வில் இந்த முறைக்கான மதிப்பெண்கள் வழங்கப்படும்.**

**<u>தொழில் வருமானம்</u>**

| | |
|---|---|
| சம்பளம் 450,000 *12 | 5,400,000 |
| ஊக்கத்தொகை | 450,000 |
| வாகன வசதி (30,000 மாதாந்தம்) | 360,000 |
| வீட்டு வசதி (40,000 மாதாந்தம்) | 480,000 |
| வெளிநாட்டு மாநாடு – வரிக்குரிய வருமானமில்லை | - |
| மருத்துவ வசதி - (அனைத்து ஊழியர்களுக்கும்) | - |
| | 6,690,000 |

**<u>முதலீட்டு வருமானம்</u>**

| | |
|---|---|
| பங்கு இலாபம் | விலக்கப்பட்ட |

| | |
|---|---|
| வாடகை வருமானம் | 600,000 |
| வட்டி வருமானம் | 165,000 |
| | 765,000 |
| **வணிக வருமானம்** | |
| தேறிய இலாபம் | 1,831,000 |
| நன்கொடை - அனுமதியில்லை | 394,000 |
| | 2,225,000 |
| **மொத்த மதிப்பிடத்தக்க வருமானம்** | **9,680,000** |
| தனிப்பட்ட கொடுப்பனவு | (1,200,000) |
| வாடகை நிவாரணம் 600,000 @ 25% | (150,000) |
| **தகைமைக் கொடுப்பனவு** | |
| ஆயுற் காப்பீடு | அனுமதியில்லை |
| கல்விச் செலவு | அனுமதியில்லை |
| பங்கு கொள்வனவு (31.12.2022 வரை அனுமதி) | அனுமதியில்லை |
| நன்கொடை - அரசாங்கத்துக்கு | (100,000) |
| நன்கொடை - பொருள் (அனுமதியில்லை) | |
| **வரி விதிக்கக்கூடிய லாபம்** | **8,230,000** |
| | |
| **வரிப் பொறுப்பு** | |
| **முதல்** 500,000 @ 6% | 30,000 |
| அடுத்த 500,000 @12% | 60,000 |
| அடுத்த 500,000 @ 18% | 90,000 |
| அடுத்த 500,000 @ 24% | 120,000 |
| அடுத்த 500,000 @30% | 150,000 |
| மீதி @ 36% | 2,062,800 |
| மொத்த வருமான வரிப் பொறுப்பு | 2,512,800 |
| APIT | (341,000) |
| வட்டி AIT (165,000@5%) | (8,250) |
| சுயமதிப்பீட்டுக் கொடுப்பனவு | (225,000) |
| செலுத்த வேண்டிய இருப்பு வருமான வரி | **1,938,550** |

**குறிப்பு – வங்கியானது வட்டியிலிருந்து WHTயை கழிக்க வேண்டும்**